**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 213** **நாள் : 23.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக தூய்மை இந்தியா திட்டம் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ,ஆ,ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

சிறப்பு நிகழ்வாக. 21.12.2018 அன்று மண்டலம் 2 க்கு உட்பட்ட மணலியில் உள்ள சி.பி.சி.எல் பாலிடெக்னிக்கில் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 500 மாணவ, மாணவியர்களும் 40 ஆசிரியர்களும் பங்கு பெற்றனர். இம்முகாமில் தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், தூய்மைக்கான மதிப்பீடு 2019 ல் பொதுமக்களின் பங்கு, பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களின் வாழ்க்கை சுழற்சி, அவை உருவாகாமல் தடுக்கும் முறைகள் முதலியன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஒருமுறை மட்டும் பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள். தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவைகளுக்கு மாற்றாக உபயோகப்படுத்தக் கூடிய பாக்கு மர தட்டுகள், துருப்பிடிக்காத எஃகு தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள், கண்ணாடி குவளைகள், காகித உறிஞ்சு குழல்கள், துருப்பிடிக்காத எஃகு பாட்டில்கள் மற்றும் ஏடிஸ் கொசு உற்பத்தியாகும் இடங்களான டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உபயோகமற்ற பிளாஸ்டிக் பொருட்கள், உடைந்த மண் பாண்டங்கள் போன்றவைகள் கண்காட்சியில் வைத்து விளக்கப்பட்டது, இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. இறுதியில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மண்டல அலுவலர் எஸ்.சங்கர், சுகாதார கல்வி அலுவலர் முனைவர். டி.ஜி. சீனிவாசன், செயற்பொறியாளர் ஸ்ரீகுமார், மண்டல நல அலுவலர் மருத்துவர் தவமணி, கல்லூரி முதல்வர். தயாநந்தன், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**